4th November 1966]

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, வெளி நாட்டில் பாஷன் மாறிவிடுகிற காரணத்தினால் நம் நாட்டுத் துணி களுக்கு கிராக்கி இல்லை என்பதாக கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே நம் நாட்டு நெசவாளர்கள் இந்த ரகத் துணிகளையே உற்பத்தி செய்துகொண்டிருக்காது, பாஷன்களுக்கு ஏற்ப உற்பத்தி செய்யவேண்டும் என்பது எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறதா? அல்லது பழைய முறையிலேயே அதிக அளவில் உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம் நாட்டுக் கைத்தறி யாளர்களும் அந்த ரகத் துணி உற்பத்தியை நிறுத்திக்கொண்டு விட்டார்கள். நம்மிடத்தில் உள்ள பழைய ஸ்டாக்கைத்தான் எப்படிக் கரைப்பது என்பது பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. க. ர. நல்லசிவம் : வண்ணம் மாறும் துணிகள் மட்டும் அல்ல. வேறு ரக கைத்தறித் துணிகளும் இன்றையதினம் தேங்கிக் கிடப்பதன் காரணமாக, கைத்தறியாளர்கள் பட்டினி கிடக்க வேண்டிய நிலை இருக்கிறது. அவர்களுக்கு உதவி செய்ய எந்த வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்காக சர்க்கார் 50 லட்சம் ரூபாய் கடன் கொடுத்து தேங்கிக் கிடக்கிற துணியை வாங்க ஏற்பாடு செய்திருக்கிறது.

Textile Mills at Coimbatore

* 395 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the steps taken and the efforts made for reopening the textile mills that remain closed for some months past at Coimbatore ; and

(*b*) the result of the said endeavour?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The State Government constituted an informal *ad hoc* Technical Committee consisting of the Director of Handlooms, Madras, and representatives of the South India Textile Research Association and Southern India Mill Owners' Association to make a close scrutiny of technical and financial position of the mills wanting nancial assistance.

The Committee has since completed its enquiries and the Government have issued orders, based on its recommendations.

திரு. வை. சங்கரன் : இதனுடைய விளைவாக மூடப்பட்டுள்ள மில்கள் எத்தனை திறக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மூன்று மில்களுக்கு உதவி செய்து திறக்கப்படும். ஒன்று கம்போடியா மில். இரண்டாவது ஜனார்த்தனா மில். மூன்றாவது கீதாஞ்சலி மில். பாங்குகளில் கடன் வாங்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள்.